[1973 செப்டம்பர் 7]

2. தகவல் கோரல்

உறுப்பினர்களுக்கு ரெயில்வே பாஸ் வழங்குவது குறித்து.

* திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும், மேலவை உறுப்பினர்களுக்கும் ரெயிலில் பயணம் செய்வதற்கு பாஸ்கள் வழங்கப்பட்டது. நமது அவை முன்னவரின் ஆலோசனைக்கு இணங்க 3 4 மாதங்களுக்கு முன்பே அவைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டீர்கள், புதிதாகத் தருவதாகக் கூறி. அதோடு இன்னொரு புதிய சலுகையைக்கூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், நீங்கள் மட்டும் தனியாகப் போக வேண்டியது இல்லை, உங்கள் மனைவிமாரையும் உடன் அழைத்துப் போகலாம் என்று தெரிவித்தார்கள். சலுகையையும் அறிவித்து விட்டு, மனைவிமார்களோடு வம்பையும் வளர ஏற்பாடு செய்து விட்டீர்கள். ஆகவே, விரைவில் இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளேயே அந்த பாஸ்களைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர்களின் வேதனை எனக்கு புரியாமல் இல்லை. நான் இங்கே அறிவித்தது உண்மை. ஆனால் அவைகளைச் செயல்படுத்துவதற்கு சட்டத்திலே சில திருத்தங்கள் தேவை. அந்தத் திருத்தங்களை உருவாக்கி விரைவில் எனக்குத் தருமாறு நான் நமது அசெம்பிளி செக்ரடரி அவர்களைக் கேட்டு இருக்கிறேன். சட்ட அமைச்சர் அவர்களும் அதற்குத் துணையாக இருந்து ஒத்துழைக்க வேண்டிக் கேட்டு இருக்கிறேன். பெரும்பாலும் இந்தத் தொடரிலேயே அந்தத் திருத்தம் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டால் நீங்கள் எல்லாம் மகிழ்ச்சி அடைகிற அளவிற்கு நான் அதற்குத் துணை இருக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கிற உரிமைகளை பறிப்பது அரசின் நோக்கமல்ல. இல்லாத உரிமைகளைத் தர முயற்சிப்பது தான் அரசின் நோக்கம் என்பதையும் நான் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

திரு. மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, இந்த இரயில்வே பாஸ் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் பல சிரமங்கள் ஏற்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சனைக்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. ஆறுமுகம்: ஆகவே, அரசுப் பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய துணைவிமார்களும் உறுப்பினர்களுடன் செல்ல வகை செய்யப் படுமா?

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, நமது சட்ட மன்றத்தின் இடதுபுறத்தில் ஐஸ் வாட்டர் தொட்டி ஒன்று இருக்கிறது. இரண்டு, மூன்று நாட்களாக அங்கே தண்ணீர் குடிப்பதற்கு குவளை இல்லை. உடனடியாக குவளை வைக்கப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கவனிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : சார், நம்முடைய உயர் நிலைப் பள்ளிகளில் ஹையர் செகண்டரி கல்வி தொடங்கப்பட்டு 3 மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஜூன் மாதத்தில் மாணவர்கள் சேர்க்கப்பட்டார்கள். அதற்குப் பின்னால், 3 மாதம் ஆன பிறகும் இன்னும் வகுப்பு நடத்த ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தாங்கள் குறிப்பிடுவது பொது விவாதத்தில் பேச வேண்டியது. ஆகவே உட்காருங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : நான் அதுபற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன் ; அதைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள் ; இப்போது தயவு செய்து உட்காருங்கள்.

3. உரிமைப் பிரச்சினைகள்

(அ) முதல் அமைச்சர் அவர்கள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் கீழ்க்கண்ட அவை உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்திருக்கிறார்கள் :—

On 1-9-1978 the Hon. Chief Minister has announced in the Assembly intervening the Marxist member Hon. Govindarajan that the Ordinance No. 2 of 1978 namely, the Tamil Nadu Essential Services Maintenance Ordinance has been withdrawn and stands cancelled now. The announcement made by the Hon. Chief Minister is contrary to the facts and amounts to deliberately misleading the House. Moreover, the act of the Chief Minister in making such announcement will certainly amount to breach of privilege.

Therefore, the matter may be referred to the Privileges Committee.

இது எப்படி அவை உரிமையை மீறிய செயலாகும் என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி திரு. சுப்பு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.